முருகப்பெருமான் துணை

**மகான் கோரக்க மகரிஷி அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

26.01.2024, வெள்ளிக்கிழமை

1. அண்ணலே கலியுக வள்ளலே
அவதார ஞான தேசிகனே
மண்ணுலகம் ஞானயுகமாகிட
மாதவ தருமசக்தி கொண்டு
2. கொண்டுமே அவதாரம் புரிந்த
குருராஜனே ஆறுமுக அரங்கனே
உண்டான உன்பெருமை கூறி
உலகத்தில் சோபகிருது கலைதிங்கள்
3. திங்களிலே வியதிகதி புகர்வாரம்
(சோபகிருது வருடம் தை மாதம் 12ம் நாள், 26.01.2024, வெள்ளிக்கிழமை)
துல்லிய ஆசிதனை கோரக்கரும்
ஓங்கார உலகம் அமைய உரைப்பேன்
ஓங்கார குடில்படைத்த அரங்கனே
4. அரங்கனே உன்குடில் தன்னை
ஆறுமுகனோடு மகா சக்திகளும்
வரங்கள்தனை தந்து காத்துவர
வணங்கி வரும் மக்களின்
5. மக்களின் வேண்டுதல் அனைத்துமே
மார்க்கமுடன் நிறைவேறுமப்பா
தேக்கமின்றி உன் குடிலமுதை
திருவருள் கூட்டி அருளமுதாக்கி
6. ஆக்கியே ஞானிகள் சக்திதர
அணுகி குடிலமுது உண்பவர்க்கு
தாக்கிய பிணிசோடை ஏவலும்
தானாக விலகி சர்வபலமாகும்
7. ஆகவே மனசலனம் சோடை
ஆக்கினை மாயை துன்பமகற்றும்
மகான் உன் கரங்கள்படவே
மக்கள் ஏற்கும் மகாமந்திர தீட்சையாலே

8. தீட்சையாலே முன்செென்ம வினையோடு
தீட்டும் மும்மலக்குற்றமும் அகலும்
மாட்சிமைபட அரங்க மகானுன்
மாதரும சக்திதனை அறிந்து

9. அறிந்துமே கலியுக மக்கள்
அதன்வழி பொருளுதவி செய்து
அறிந்துமே தொடர்ந்து வர
ஆன்மா பலம்பெறும் தருமத்தால்

10. தருமத்தால் தன்னை சுத்திசெய்வதுடன்
தானம் தருபவர் பெறுபவரென
கருமவினை அனைவருக்கும் விலகி
கலியினில் பெரும்மாற்றம் நிகழும்

11. நிகழும் நீ நான் என்ற சுயநல
நிந்தனை தீ கருகி நாம் எனும்
மிகையான சமத்துவ பொதுநலம்
மேலோங்கி ஞானயுகமாற்றம் காணும்
துல்லிய ஆசி முற்றே

—சுபம்—